1981 மார்ச் 4]

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஈ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரியிலே பணியாற்றுகின்ற டாக்டர்கள் பிரைவேட் கன்சல்டேஷன் வைத்துக் கொள்ளக்கூடாது என்று உத்தரவு இருக்கிறது. வேறு மருத்துவ மனைகளிலே இந்த மாதிரியான கண்டிஷன் கிடையாது. ஆகவே, பல பேர் இதற்கு வருவதற்கு விருப்பப்படுவதில்லை'. ஆகவே, இரண்டு பேர் களுக்கும் ஒரே விதிமுறையை ஏற்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனியாகவே, செபரேட் கேடர் ஆப் டாக்டர் களை இதற்கென்று ரெக்ரூட் செய்யப் போகிறோம், அப்படி வரும்போது அவர்கள் தேவைகளைக் கேட்பார்கள். அப்போது கண்டிஷன்போட்டு, அதை ஏற்றுக்கொண்டு பணி யாற்ற வருவார்கள்.

திருச்சியில் குடிநீர் வசதியை விரிவு படுத்துதல்.

*—வினா எண். 367—திரு. இரா. தாமரைக்கனி : மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரில் குடிநீர் வசதியை விரிவுபடுத்த ஆய்வுத் தொகை எவ்வளவு கட்டப்பட்டுள்ளது ?

(ஆ) ஆம் எனில் மேற்படி நகருக்கு குடிநீர் வசதி விரிவு படுத்த எவ்வளவு பண ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ?

(இ) வேலை எப்பொழுது நடைபெற இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஒன்றும் இல்லை.

(ஆ) திருச்சி நகருக்கு குடிநீர் வசதியை விரிவுபடுத்த முதல் கட்டமாக ரூ. 130 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. இரண் டாவது கட்டமாக ரூ. 161·30 இலட்சம் சமீபத்தில் அனுமதிக் கப்பட்டது.

(இ) முதற்கட்ட வேலைகள் அனைத்தும் முடிக்கப் பெற்று இரண்டாவது கட்ட வேலைகள் துவங்கப்பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர் களே, இந்த இரண்டாம் கட்ட வேலை ஆரம்பிக்கும்போது, திருச்சி நகரில் புதியதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் நகர், பெருந்தலைவர் காமராஜ் நகர், கருணாநிதி நகர்,

ஸ்டேட் பாங்கு காலனி போன்ற பகுதிகளில் தண்ணீர் வருவது கிடையாது. ஆகவே, இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும்போது, இந்தப் பகுதிகளுக்கும் தண்ணீர் கொடுக்க அரசு ஆய்வு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவ னந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது கட்ட வேலை முடிவு பெற்றவுடன் திருச்சி நகருக்கு இப்போது 20 மில்லியன் லிட்டர் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருவது, 30 மில்லியன் லிட்டர் தண்ணீராக வழங்கப்பட இருக்கிறது. ஆனால், குடி தண்ணீர் விநியோக முறைக்கு 173 கிலோ மீட்டர் தூரத்திற்கு டிஸட்ரிபியூஷன் பைப்புகள் போடப்பட்டுள்ளன. மேலும், இந்த விநியோக முறை வளர்ச்சி அடைந்த பகுதிகளுக்கு 73 கிலோ மீட்டர் தூரத்திற்கு விரிவுபடுத்தப்படும். தில்லை நகர், மற்றும் இராணுவப் பகுதிகளுக்கு 42 கிலோ மீட்டர் தூரத்திற்கு விநியோக முறை மாற்றியமைக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருச்சியிலே சில பகுதிகளில் குறிப்பிட்ட நேரங்களில்தான் தண்ணீர் வருகிறது. அந்த நேரம் மக்களுக்குப் பயன்படும் நேரமாக இல்லை ஆகவே, அங்குள்ள பொது மக்கள் குறிப்பிட்ட இந்த நேரத்திலே விட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அந்த வேண்டுகோளை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுகோள் கவனிக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரில், திருச்சி ஜங்ஷன் பகுதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடிக்கடி வந்து செல்லும், அவரது பார்வையில் இருக்கக்கூடிய ஒரு பகுதி. அந்தப் பகுதியிலே கட்டப்பட்டிருக்கிற தண்ணீர் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் அது இன்னும் இயங்கவில்லை. இதில் தாமதத்திற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கட்டம் முடிந்து, இரண்டாவது கட்டம் ஆரம்பிப்பதற்கு முன் அவ்வளவு தண்ணீர், இவ்வளவு தண்ணீர் என்று அமைச்சர் அவர்கள் என்னென்னவோ சொன்னார்கள். அங்கே தண்ணீர்

1981 மார்ச் 4]

ரொம்ப லிமிடெட்டாக இருக்கிறது. ஆகவே, இதில் '. . பர்தர் இம்ப்ரூமெண்ட்' எப்போது எதிர் பார்க்கலாம் என்ற கால நிலையை எதிர்பார்க்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிக்குச் சென்றிருந்தபோது ஒரு யோசனை வந்தது. அங்கு கொள்ளிடம் நதி செல்கிறது. நிரம்ப தண்ணீர் போகிறது. காவிரியும் பாய்கிறது. இருந்த போதிலும் திருச்சியில் பெண்கள் குடிதண்ணீருக்காக பைப்பில் பல மணி நேரம் நிற்கிற நிலைமையைப் பார்த்தபோது, 'சர்ப்பிளஸ் வாட்டர்' வரும்போது தேக்கி வைக்கிற முறைகள் ஏதாவது செய்ய வேண்டும் என்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். அது தான் திருச்சி நகருக்குத் தண்ணீர் கிடைப்பதற்கு நல்ல முறையாக இருக்குமென்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தில் இருக்கிற மத்திய சிறைக்குத் தண்ணீர் எப்போதுமே பற்றாக் குறையாக இருந்து வருவது அரசுக்குத் தெரியுமா. . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படியே போனால் இன்னின்னார் வீட்டிற்குத் தண்ணீர் வரவில்லை, அரசுக்குத் தெரியுமா என்று கேட்பார்கள், அதற்கெல்லாம் அமைச்சர் பதில் சொல்ல முடியாது.

•

குன்னூர் நகரில் குடிநீர் வடிகால் வாரிய வேலைகள்.

*வினா எண். 368—திரு. மு. அரங்கநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் குன்னூர் நகரில் 1968 ஆம் ஆண்டு திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட வேலை இன்று வரை முடியவில்லை என்பது உண்மையா ?

(ஆ) எப்போது அந்த வேலை முடிவடைந்து நகராட்சிக்கு ஒப்படைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்களுக்குள் முடிவுற்று நகராட்சியிடம் ஒப்படைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.